வணிக வித்தியம்
The Journal of Business Economics and Management Studies - JBEMS
Faculty of Commerce & Management
Eastern University, Sri Lanka.

INVESTMENT THOUGHTS IN THIRUKKURAL: ANCIENT INSIGHTS FOR MODERN FINANCIAL MANAGEMENT

திருக்குறளிலான முதலீட்டுச் சிந்தனைகள்: நவீன நிதி முகாமைத்துவத்துக்கான பண்டைய நோக்குகள்

ஆறுமுகம் சுப்பிரமணியம்
நிதி முகாமைத்துவத்துறை, முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
smani@univ.Jfn.ac.lk

Abstract

Financial management plays a vital role in the effective functioning of modern financial systems. It mainly focuses on two fundamental activities: the mobilization of financial resources and their efficient allocation and utilization. Investment refers to the deployment of financial resources with the intention of generating income or increasing wealth over time. The primary objectives of investment generally include maximizing returns, reducing risk, and safeguarding the stability and security of invested funds. The classical Tamil literary work Thirukkural is structured into three major divisions: Arathuppaal (virtue), Porutpaal (wealth), and Inbathuppaal (love). Among these sections, Porutpaal provides valuable insights into financial management, governance, and the acquisition and preservation of wealth. This study aims to explore the perspectives presented in the Thirukkural regarding investment decisions and other concepts related to investment. This study is based on secondary data. The textual analysis and explanations of the selected Thirukkural couplets are based on the classical commentary of Parimelazhagar. Several couplets in the Thirukkural highlight important concepts associated with sound financial decision-making, including the pursuit of higher returns, prudent control of expenditures and, effective management of risks, anticipation and prevention of potential losses, and the avoidance of common investment errors such as excessive greed and emotional bias. In particular, the expressions related to the key concepts of behavioural finance such as overconfidence, loss aversion, and regret aversion; which have gained significant prominence in recent times, can be observed in the Thirukkural. These insights illustrate that the ethical and financial wisdom found in the Thirukkural continues to hold significant relevance for contemporary investment practices and reflects the timeless relevance and universal applicability of its teachings. The study establishes a conceptual connection between the investment-related thoughts expressed in the Thirukkural and contemporary financial management principles, demonstrating the continuing relevance of traditional Tamil wisdom to modern financial decision-making.

Keywords: *Thirukkural, Investment, Investment Objectives, Income, Risk, Behavioural Finance*

ஆய்வுச்சுருக்கம்

இன்றைய நவீன பொருளாதாரக் கட்டமைப்புக்களின் மையப் புள்ளியாக நிதி அமைகின்றது. நிதி முகாமைத்துவமானது நிதியைத் திரட்டுதல் மற்றும் நிதியைப் பிரயோகித்தல் ஆகிய இரு பிரிவுகளைக் கொண்டது. வருமானம் உழைக்கும் நோக்குடனான நிதிப் பிரயோகங்கள் முதலீடுகள் ஆகும். முதலீடுகள் தொடர்பிலான வருமானத்தை உச்சப்படுத்துதல், ஆபத்துக்களை இழிவுபடுத்துதல், பாதுகாப்பைப் பேணுதல் என்பன முதலீடுகளின் பிரதான நோக்கங்களாக அமைகின்றன. அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் ஆகிய முப்பிரிவுகளுள் உலகியலை அடக்கிய நூலாகத் திருக்குறள் விளங்குகின்றது. முதலீட்டுத் தீர்மானங்கள் தொடர்பில் திருக்குறள் வெளிப்படுத்தும் கருத்துக்களை ஆராய்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும். இந்த ஆய்வானது இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். அத்துடன் திருக்குறள்

Corresponding smani@univ.Jfn.ac.lk

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

தொடர்பான விளக்கங்கள் பரிமேலழகரினது உரையை அடிப்படையாகக் கொண்டுள்ளன. வருமானத்தைப் பெருக்குதல், செலவினங்களைக் குறைத்தல், ஆபத்துக்களை இழிவுபடுத்துதல், ஆபத்துக்களை முன்னுணர்வு செய்து தடுத்தல், முதலீடுகளின் பாதுகாப்பைப் பேணல் போன்றன தொடர்பிலான அம்சங்கள் பல்வேறு குறட்பாக்களில் கையாளப்பட்டுள்ளன. குறிப்பாக அண்மைக் காலங்களில் அதிக பிரபல்யம் பெற்றுவரும் நடத்தைசார் நிதியியலின் பிரதான கோட்பாடுகளான அதீத நம்பிக்கை, நட்ட வெறுப்பு, விசன வெறுப்பு என்பன தொடர்பான வெளிப்படுத்தல்களும் திருக்குறளில் காணப்படுவது அதனது எக்காலத்துக்கும் பொருத்தமான தன்மையை வெளிப்படுத்தி நிற்கின்றது. இந்த வகையில் திருக்குறளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள முதலீடு தொடர்பான சிந்தனைகளுக்கும் நவீன நிதி முகாமைத்துவக் கோட்பாடுகளுக்கும் இடையிலான கருத்தியல் தொடர்பை இவ்வாய்வு நிறுவுவதுடன், நவீன நிதிசார் தீர்மானங்களை மேற்கொள்வதில் பாரம்பரியத் தமிழ்ச் சிந்தனைகளின் தொடர்ச்சியான பொருத்தப்பாட்டையும் முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுகின்றது.

முதன்மைச் சொற்கள்: திருக்குறள், முதலீடு, முதலீட்டு நோக்கங்கள், வருமானம், ஆபத்து, நடத்தைசார் நிதியியல்

1. அறிமுகம்

நீர் இன்று அமையாது உலகு என நீரின் பெருமை பகன்ற வள்ளுவப் பெருந்தகை நிதியும் இன்றி அமையாது உலகு என நிதியின் மகிமையையும் முக்கியத்துவத்தையும் பல குறட்பாக்கள் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். திருக்குறளானது பல்வேறு நிதி முகாமைத்துவக் கருத்துக்கள், நடைமுறைகள் என்பனவற்றைக் குறித்துரைக்கின்றது (வேல்நம்பி, 2009). மனித வாழ்வுக்கு அவசியமான பொருள் அல்லது செல்வம் அல்லது நிதி பற்றிய கருத்துக்களை திருக்குறளின் பொருட்பாலானது விவரிக்கின்றது. திருக்குறளின் மொத்தக் குறட்பாக்களின் அரைப்பங்கிற்கு அதிகமான குறட்பாக்களைக் கொண்டதாக பொருட்பாலானது கட்டமைக்கப்பட்டுள்ளது. இது மனித வாழ்வுக்குப் பொருளின் முக்கியத்துவம் பற்றிய வள்ளுவரின் எண்ணவோட்டத்தைப் பிரதிபலிக்கின்றது.

> ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
>
> ஏனை இரண்டும் ஒருங்கு. ……(760)

மேற்படி குறட்பா வாயிலாக அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றினுள் பொருளை அல்லது செல்வத்தை தகுந்த வழியில் ஈட்டியவர்களுக்கு ஏனைய இரண்டுமாகிய அறமும் இன்பமும் எளிதாக வந்து சேருமெனத் தெய்வப் புலவர் செல்வத்தின் மகத்துவத்தை உரைக்கின்றார். இதற்கும் மேலாக பொருள் அல்லது செல்வம் இல்லாதவர்களுக்கு இவ்வுலகிலே இன்பமான வாழ்வு இல்லை என்று அன்றே கணித்துப் பின்வரும் குறளில் அதனையும் இடித்துரைத்துள்ளார்.

> அருள்இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள்இல்லார்க்கு
>
> இவ்வுலகம் இல்லாகி யாங்கு. ……(247)

மேலும் ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும், மதிப்புடையவராக மாற்றக்கூடிய ஆற்றல் அல்லது பொருள் செல்வத்துக்கு உள்ளது எனப் பின்வரும் குறளில் வள்ளுவர் விளக்குகின்றார்.

> பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
>
> பொருளல்லது இல்லை பொருள். ……(751)

இந்த வகையில் எக்காலத்துக்கும் பொருந்திவரக் கூடிய பொய்யா மொழி நூலாகிய திருக்குறளில் நிதி முகாமைத்துவத்தில் நிதிப் பிரயோகத்தின் அடிப்படை அம்சமாகிய முதலீடு என்ற நிதியியல் நடவடிக்கை தொடர்பில் திருக்குறளில் காணப்படும் கருத்துக்களை எடுத்துக் காட்டுவதற்கு இந்த

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

ஆய்வு முற்படுகின்றது. எதிர்காலப்பகுதியில் சன்மானமொன்றைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் தற்போது நிதியை ஏதாவது முயற்சிகளிலோ அல்லது பிற விடயங்களிலோ ஈடுபடுத்தும் செயற்பாடு முதலீடு எனப்படும் *(Samarakoon, 2010)*.

2. ஆய்வின் நோக்கம்

திருக்குறளானது அறநெறி, தத்துவம், சமூகவியல் மற்றும் பொருளாதாரம் ஆகிய பல்வேறு கண்ணோட்டங்களில் விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ள போதிலும், அதில் காணப்படும் முதலீடு தொடர்பான சிந்தனைகளை நவீன நிதி முகாமைத்துவக் கோட்பாடுகளுடன் தொடர்புபடுத்தி முறையாக ஆராய்வதில் போதியளவு ஆய்வுக் கவனம் செலுத்தப்படவில்லை. குறிப்பாக, முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்ளுதல், இடர் முகாமைத்துவம், மூலதனத்தின் பாதுகாப்பு, மற்றும் நிதித் திட்டமிடல் போன்ற நவீன நிதியியல் கருத்துக்களுடன் திருக்குறள் சிந்தனைகளைத் தொடர்புபடுத்தும் ஒருங்கிணைந்த கருத்தியல் பகுப்பாய்விற்கான தேவை காணப்படுகின்றது. இந்த ஆய்வு இடைவெளியை நிவர்த்தி செய்யும் நோக்கில், பரிமேலழகரின் உரையை அடிப்படையாகக் கொண்டு, திருக்குறளில் பொதிந்துள்ள முதலீடு தொடர்பான சிந்தனைகளை அடையாளம் கண்டு, அவற்றிற்குப் பொருள்விளக்கம் அளித்து, நவீன நிதி முகாமைத்துவ நடைமுறைகளுடன் அவை கொண்டுள்ள தொடர்பையும் பொருத்தப்பாட்டையும் ஆராய்வதற்கு இவ்வாய்வு முற்படுகின்றது.

3. ஆய்வு முறையியல்

இவ்வாய்வு பண்புசார் ஆய்வு அணுகுமுறையை பின்பற்றுவதுடன், இரண்டாம் நிலைத் தரவுகள் மற்றும் பரிமேலழகரின் உரையை அடிப்படையாகக் கொண்டு, திருக்குறளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள முதலீடு தொடர்பான சிந்தனைகளை கருத்தியல் மற்றும் பொருள்விளக்கப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி, அவை நவீன நிதியியல் முகாமைத்துவக் கோட்பாடுகளுடன் கொண்டுள்ள தொடர்பையும் பொருத்தப்பாட்டையும் ஆராய்கின்றது.

4. பகுப்பாய்வும் கலந்துரையாடலும்

4.1 திருக்குறள்

பொய்யாமொழிப் புலவர் எனச் சிறப்பிக்கப்படும் திருவள்ளுவரினால் படைக்கப்பட்ட திருக்குறளானது இனம், மதம், தேசம், காலம் என்ற பேதங்கள் யாவற்றையும் கடந்து உலகியல் தத்துவங்களைப் போதிப்பதனால் உலகப் பொதுமறை எனப் போற்றப்படுகின்றது. மனிதனுக்கு உரிமையான இன்ப வாழ்வுக்குத் துணையாக அமைவது பொருளியல் வாழ்வாகும். இவையிரண்டுக்கும் அடிப்படையாக அமைவது அற வாழ்வாகும். திருக்குறளானது அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் ஆகிய மூன்று பகுதிகளாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அறத்துப்பாலானது *38* அத்தியாயங்களையும் பொருட்பாலானது *70* அத்தியாயங்களையும் இன்பத்துப்பாலானது *25* அத்தியாயங்களையும் உள்ளடக்கியதாக மொத்தம் *1330* குறட்பாக்களை மொத்தம் *14000* சொற்களிலும் *42194* எழுத்துக்களிலும் தன்னகத்தே கொண்ட நூலாகத் திருக்குறள் விளங்குகின்றது.

4.2 முதலீடுகள்

நிதி முகாமைத்துவமானது நிதியைத் திரட்டுதல் மற்றும் நிதியைப் பயன்படுத்துதல் ஆகிய நிதிசார் நடவடிக்கைகளைத் திட்டமிட்டு ஒழுங்குபடுத்திக் கட்டுப்படுத்துகின்ற செய்முறையாகும். இந்த வகையில் நிதி முகாமைத்துவமானது நிதியைத் திரட்டுதல் மற்றும் நிதியைப் பயன்படுத்துதல் ஆகிய இரண்டு பிரிவான செயற்பாட்டுக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இங்கு நிதியைப் பயன்படுத்துதல் என்பது நிதி வளங்களைப் பொருத்தமான முதலீடுகளில் ஈடுபடுத்தி வருமானத்தைப் பெருக்குவதனைக் கருதும் *(Alexander, 2018; Brigham & Ehrhardt, 2005)*.

செல்வத்தை உச்சப்படுத்துதல் என்ற நிதி முகாமைத்துவத்தின் நோக்கத்தை அடைவதற்கு முதலீடுகள் அடிப்படையாக அமைகின்றன. வருமானத்தை உழைக்கும் நோக்குடன் அல்லது

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பெறுமதி அதிகரிப்பின் மூலமாக மூலதன இலாபத்தை ஈட்டும் நோக்குடன் பணப் பெறுமதி வாய்ந்த சொத்துக்களைக் கொள்வனவு செய்து தம்வசம் பேணிக் கொள்வதனை முதலீடுகள் என வரைவிலக்கணப்படுத்தப்படும் *(Kevin, 2006)*. இந்த வகையில் உற்பத்தித்திறன் வாய்ந்த நோக்கங்களுக்கான மூலதனப் பாய்ச்சல் என்பது முதலீடுகளின் அடிப்படை அம்சமாகக் காணப்படுகின்றது. இந்த வகையில் முதலீட்டாளர்களின் செல்வத்தை உச்சப்படுத்தும் நோக்குடன் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சொத்துக்களில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நிதியினை ஈடுபடுத்துவதனை முதலீடு எனக் குறிப்பிடலாம். இங்கு முதலீட்டாளர்களின் செல்வம் என்பது அவர்களினது தற்போதைய வருமானம் மற்றும் அனைத்து எதிர்கால வருமானங்களினதும் நிகழ்காலப் பெறுமதி ஆகியவற்றின் தொகுப்பாக அமையும் *(Mayo, 2008)*.

பொதுவாக முதலீடுகள் தற்போதைய காசு வெளிப்பாய்ச்சல்களுடன் ஆரம்பிக்கப்படுவதுடன் பணத்தினது கொள்வனவு வலுவில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் எதிர்காலம் தொடர்பிலான நிச்சயமற்ற தன்மை என்பன தொடர்பிலான தாக்கங்களை ஈடு செய்யக் கூடிய வகையிலான எதிர்கால காசு உட்பாய்ச்சல்களை எதிர்பார்ப்பதாகவும் காணப்படும் *(Reilly & Brown, 2012)*. இதனால் எதிர்கால நன்மைகளை அடையும் நோக்குடன் நிகழ்காலத்தில் பணத்தையும் ஏனைய வளங்களையும் பொருத்தமான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் செயற்பாடு எனவும் முதலீடுகளைக் குறிப்பிட முடியும் *(Bodie et al., 2013)*. எனவே முதலீடு என்பது நிகழ்காலக் கொடுப்பனவுகள், காலம், எதிர்கால நன்மைகள் ஆகிய மூன்று பரிமாணங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கும்.

முதலீடு என்ற எண்ணக்கருவின் தோற்றமும் வரலாறும் தொன்மையானதாகும். ஆரம்ப காலங்களில் தானியங்களை மையமாகக் கொண்ட சேமிப்பு மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகள் காணப்பட்ட போதும் பணத்தை அடிப்படையாகக் கொண்ட முதலீட்டுச் செயற்பாடுகள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டளவில் ரோம் நகரில் இடம் பெற்றமைக்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன *(Vaish, 1978)*. இலண்டனில் கிழக்கிந்தியக் கம்பனிகளின் தோற்றத்துடன் முதலீடுகளின் நவீன கால கட்டம் ஆரம்பமானது *(Monks, 2001)*.

4.3 முதலீட்டு நோக்கங்கள்

வருமானத்தை உச்சப்படுத்துவதும் ஆபத்தை இழிவுபடுத்துவதும் முதலீடுகளின் அடிப்படை நோக்கங்களாக அமைகின்றன *(Kevin, 2006; Laopodis, 2020)*. ஒரு முதலீடு தொடர்பாக ஒரு குறித்த காலப்பகுதியில் பெறப்படுகின்ற பணத் தொகை வருமானம் எனப்படும் *(Hutchinson et al., 1994)*. இங்கு இலாபம், பங்கிலாபம், வட்டி, மூலதன இலாபம் போன்ற வடிவங்களில் முதலீடுகளிலிருந்தான வருமானம் பெறப்படும். மறுபுறம் முதலீடுகளிலிருந்தான எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை முதலீட்டாளர்கள் அடைந்து கொள்ள முடியாத நிலைமையை ஆபத்து எனப்படும் *(Reilly and Brown, 2012)*.

இவற்றுக்கு மேலதிகமாக முதலீட்டாளர்கள் முதலீடுகளை மேற்கொள்ளும் போது முதலீடுகளின் பாதுகாப்பையும் கவனத்தில் கொள்ள வேண்டும். முதலீடுகளின் பாதுகாப்பு என்பது முதலீடுகள் தொடர்பான மூலதனத் தொகைக்கான பாதுகாப்பு அல்லது முதலீடுகளின் ஆரம்ப மூலதனத்தினை மீளப் பெறக் கூடிய தன்மையைக் கருதும் *(Fischer and Jordan, 2002)*. எனவே முதலீட்டாளர்கள் முதலீடுகளை மேற்கொள்ளும் போது முதலீடுகளிலிருந்து பெறப்படக் கூடிய வருமானம், முதலீடுகள் தொடர்பான ஆபத்துக்கள், மூலதனத்துக்கான பாதுகாப்பு ஆகிய அடிப்படை அம்சங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

4.4 முதலீட்டு நோக்கங்களும் திருக்குறளும்

முதலீட்டு வருமானங்களை உச்சப்படுத்துதல் நோக்கமும் திருக்குறளும்

முதலீட்டு வருமானங்களை உச்சப்படுத்துதல் என்ற அம்சம் தொடர்பில் திருக்குறள் காட்டும் சிந்தனைகளை நோக்குமிடத்து முதலில் முதலீட்டுக்கான திட்டமிடலை மேற்கொள்ளும் போது

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

முதலீடுகளிலிருந்தான வருமானங்கள், முதலீடு தொடர்பான செலவினங்கள் மற்றும் இறுதி இலாபத் தொகை என்பனவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்ற அம்சம் தொடர்பாகப் பின்வரும் குறள் எடுத்துரைக்கின்றது.

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல். .....(461)

ஒரு செயலை ஆரம்பிக்க முன்னர் அச்செயலினால் முதலில் அழியக் கூடியதனையும் பின்னர் ஆகிவரக் கூடியதனையும் (நன்மையையும்) இறுதியாகக் கிடைக்கக்கூடிய ஊதியத்தையும் ஆராய்ந்து பார்த்த பின்னரே அச்செயலினை ஆரம்பிக்க வேண்டும் என்பதே இந்தக் குறட்பாவின் கருத்தாகும். ஓரு முதலீட்டினை மேற்கொள்வதற்கான முதலீட்டுத் திட்டமிடலை முன்னெடுக்கும் போது முதலில் அந்த முதலீடு தொடர்பாக ஏற்படக் கூடிய செலவினங்களையும் பின்னர் அந்த முதலீடு தொடர்பாகக் கிடைக்கக் கூடிய வருமானங்களையும் அந்த முதலீடுக்கு இறுதியாகக் கிடைக்கக் கூடிய இலாபத்தையும் ஆராய்ந்து பார்த்த பின்னர் அந்த முதலீடானது போதிய இலாபத்தை வழங்குமாயின் மட்டுமே அந்த முதலீட்டை மேற்கொள்ளுதல் வேண்டும். இந்த முறைமையின் அடிப்படையில் இலாபத்தை மையமாகக் கொண்டு ஒன்றுக்கு மேற்பட்ட முதலீட்டு வாய்ப்புக்களுக்கிடையில் ஒப்பீட்டை மேற்கொண்டு சிறந்த இலாபகரமான முதலீடுகளைத் தெரிவு செய்யவும் முடியும். இதன் மூலமாக முதலீட்டின் நோக்கமாகிய வருமானத்தை உச்சப்படுத்துதல் என்பதனை அடைய முடியும்.

மேலும் முதலீடுகளிலிருந்தான இலாபத்தை உச்சப்படுத்துவதற்கு முதலீடுகள் தொடர்பான வருமானங்கள் அதிகரிக்கப்பட வேண்டிய அதே வேளை முதலீடுகள் தொடர்பான செலவினங்கள் இழிவாக்கப்பட வேண்டும். இலாபத்தை உச்சப்படுத்துவதற்கான மேற்படி இரண்டு வழிவகைகளும் பின்வரும் குறட்பாக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. வருமானங்கள் அதிகரிக்கப்பட வேண்டுமென்பதை பின்வரும் குறள் குறிப்பிடுகின்றது.

வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை. .....(512)

இங்கு பொருள் (வருமானம்) வருவதற்கான வழிவகைகளைப் பெருகச் செய்து அதன் மூலமாக செல்வத்தை வளப்படுத்துதல் என்ற கருத்து முன் வைக்கப்பட்டுள்ளது

இதே போன்று செலவுகள் இழிவுபடுத்தப்பட வேண்டுமென்ற கருத்தைப் பின்வரும் குறளிலும் காணலாம்.

ஆகாறு அளவுஇட்டிது ஆயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை. .....(478)

பொருள் வரும் வழி அதாவது வருமானமானது சிறிதாக இருந்தாலும் போகும் வழி அதாவது செலவினமானது பெரிதாக அமையாதுவிடின் கேடில்லை என்ற பொருளுடைய இக்குறட்பாவானது செலவினத்தை இழிவுபடுத்துவதன் மூலமாக இலாபத்தை உச்சப்படுத்தும் வழிவகை பற்றிக் குறிப்பிடுகின்றது.

முதலீட்டு ஆபத்துக்களை இழிவுபடுத்துதல் நோக்கமும் திருக்குறளும்

முதலீடுகள் தொடர்பான அடுத்த நோக்கமாகிய ஆபத்துக்களை இழிவுபடுத்துதல் தொடர்பில் குறட்பாக்களில் வெளிப்படுத்தப்படும் விடயங்களைத் தற்போது நோக்கலாம்.

முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். .....(676)

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

ஒரு செயலைச் செய்யுங்கால் அதனை முடிப்பதற்கான முயற்சியையும் அங்கு ஏற்படக்கூடிய கூடிய இடையூறுகளையும் அச்செயலின் நிறைவேற்றுகையின்போது கிடைக்கக்கூடிய பெரும் பயனையும் சீர் தூக்கிப் பார்த்த பின்னரே அச்செயலை மேற்கொள்ள வேண்டுமென்பதே இதன் பொருளாகும். ஆபத்துக்களை இழிவுபடுத்துதல் என்ற முதலீட்டு நோக்கத்தை அடையக் கூடிய வகையிலும் எதிர்கொள்ளப்படும் ஆபத்துக்கு ஏற்ற அளவிலான வருமானத்தை ஈட்டக் கூடிய வகையிலும் முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். முதலீட்டுக்குத் தேவையான மூலதனம் மற்றும் ஏனைய தேவைப்பாடுகள், முதலீடு தொடர்பில் எழக்கூடிய ஆபத்துக்கள் (இடையூறுகள்), முதலீட்டின் நிறைவில் கிடைக்கக் கூடிய இலாபம் என்பனவற்றை ஒப்பிட்டு ஆராய்ந்த பின்னரே முதலீட்டினை மேற்கொள்ள வேண்டும் என்பதனை இந்தக் குறளினது முதலீடு சார் கருத்தாகக் கொள்ள முடியும்.

முதலீட்டாளர்கள் தமது முதலீடு தொடர்பான ஆபத்துக்களை இழிவுபடுத்தும் பொருட்டு தகுந்த ஆபத்து முகாமைத்துவ நுட்பங்களைப் பயன்படுத்துதல் வேண்டும். சிறந்த ஆபத்து முகாமைத்துவமானது முதலீடுகள் தொடர்பாக எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய ஆபத்துக்களை முன்கூட்டியே முன்னுணர்வு செய்து அறிந்து கொள்ள உதவுவதுடன் அந்த ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்கு அல்லது குறைப்பதற்கும் உதவும்.

முன்உறக் காவாது இழுக்கியான் தன்பிழை

பின்ஊறு இரங்கி விடும். ..... (535)

வரக்கூடிய துன்பங்கள் அல்லது ஆபத்துக்களை முன்கூட்டியே சிந்தித்து அறிந்து தன்னைக் காத்துக் கொள்ளத் தவறியவன் அந்தத் துன்பங்கள் அல்லது ஆபத்துக்கள் ஏற்பட்ட பின்னர் தன் பிழையை எண்ணி வருந்துவான் என்ற கருத்துடைய இந்தக் குறட்பாவின் மூலமாகத் துன்பங்கள் அல்லது ஆபத்துக்களை முன்கூட்டியே முன்னுணர்வு செய்து அவற்றைத் தடுப்பதற்கான அல்லது தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் அவ்வாறு செய்யத் தவறிய நிலையில் அந்தத் துன்பங்கள் அல்லது ஆபத்துக்கள் ஏற்பட்ட பின்னர் ஏற்படக் கூடிய துன்ப உணர்வையும் பொய்யா மொழிப் புலவர் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றார். இந்தக் கருத்துக்கள் முதலீட்டுச் செயற்பாடுகளுக்கும் பொருத்தப்பாடுடையனவாக உள்ளன. ஆயினும் பின்வரும் குறளின் மூலமாக மேற்படி துன்பங்கள் அல்லது ஆபத்துக்கள் ஏற்பட்டாலும் கலக்கமடையாது முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும் என்ற கருத்தை வள்ளுவனார் இடித்துரைக்கின்றார்.

ஊறுஓரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்

ஆறுஎன்பர் ஆய்ந்தவர் கோள். ..... (662)

இடையூறு அல்லது ஆபத்து ஏற்படுவதற்கு முன்பாகவே அதனை நீக்கி விட முனைவதுவும் மீறி அந்த இடையூறு அல்லது ஆபத்து வந்து விடுமானால் மனம் தளராது இருப்பதுவுமே அறிவுடையோர் கொள்கையாகும் என்பதே மேற்படி குறளின் பொருளாகும். முதலீட்டின் நோக்கங்களிலொன்றாகிய ஆபத்துக்களை இழிவுபடுத்துதல் என்பதனை அடையும் பொருட்டு முதலீட்டாளர்கள் முதலீடுகள் தொடர்பில் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை சரியாக முன்னுணர்வு செய்வதுடன் அத்தகைய ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்கு அல்லது அந்த ஆபத்துக்களின் பாதகமான விளைவுகளைக் குறைப்பதற்குப் பொருத்தமான ஆபத்து முகாமைத்துவ நுட்பங்களைத் தெரிவு செய்து அமுல்படுத்த வேண்டும். இதற்கு மேலதிகமாக மேற்படி குறளில், ஆபத்து முகாமைத்துவ நடவடிக்கைகளையும் மீறி அந்த ஆபத்து ஏற்படுமாயினும் மனம் தளராது இருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள கருத்தானது நடத்தைசார் நிதியியலில் *(Behavioural Finance)* அண்மைக் காலங்களில் அதிகம் பிரபல்யம் பெற்றுள்ள நட்ட வெறுப்பு *(Loss Aversion)* மற்றும் கவலை அல்லது விசன வெறுப்பு *(Regret Aversion)* ஆகிய முதலீட்டுத் தவறுகள் பற்றிச் சுட்டி நிற்கின்றது. இங்கு நட்ட வெறுப்பு என்பது முதலீட்டாளர்கள் முதலீடுகளிலிருந்து இலாபம் கிடைக்கும் போது ஏற்படும் மகிழ்வான உணர்வை விட இரு மடங்கான துன்ப உணர்வை அதே அளவிலான முதலீட்டு நட்டங்கள் ஏற்படும் போது எதிர் கொள்கின்றனர் என்பதாகும் *(Kahneman and Tversky,*

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

1979; Rahawarin, 2023). இதே போன்று கவலை அல்லது விசன வெறுப்பு என்பது முதலீட்டாளர்கள் தவறான முதலீட்டுத் தீர்மானங்களால் ஏற்படக் கூடிய கவலை அல்லது துன்ப உணர்வைத் தவிர்த்துக் கொள்ள விரும்புகின்றனர் (Shiller, 1998; Loppies et al., 2022). தற்போது நடத்தைசார் நிதியியலில் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ள இந்த கவலை அல்லது விசன வெறுப்புக் கோட்பாட்டை வள்ளுவர் பின்வரும் குறளில் பல நூற்றாண்டுக்கு முன்பே வெளிப்படுத்தியுள்ளமையானது திருக்குறளின் பெருமையைப் பறைசாற்றுகின்றது.

தெளிவி லதனைத் தொடங்கார் இழிவென்னும்

ஏதப்பாடு அஞ்சு பவர். ..... (464)

தனக்கு அவமானம் என்னும் குற்றம் வரும் என்று பயப்படுபவர், நம்பிக்கை இல்லாத செயலை முன்னெடுக்கமாட்டார் என்பதே இதன் பொருளாகும்.

மேற்படி முதலீட்டுத் தவறுகள் காரணமாக முதலீட்டாளர்கள் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து ஒதுங்கியிருக்கும் நிலைமை மற்றும் சிறந்த இலாபகரமான முதலீடுகளில் தமது பணத்தை முதலீடு செய்யத் தவறும் நிலைமை என்பன காணப்படுவதாகப் பல்வேறு ஆய்வுகள் மூலமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன (Pompian, 2006). மேற்படி குறளின் மூலமாக ஒரு ஆபத்து நிலைமை ஏற்பட்டு அதன் மூலமாக நட்டங்கள் ஏற்பட்டாலும் முதலீட்டாளர்கள் மனம் தளராது தொடர்ந்தும் முதலீட்டுச் செயற்பாடுகளில் தகுந்த ஆபத்து முகாமைத்துவ நுட்பங்களின் உதவியுடன் ஈடுபட வேண்டும் என்ற கருத்தை நாம் கற்றுக் கொள்ள முடியும். மேற்படி கருத்தைப் பின்வரும் குறளும் சுட்டி நிற்கின்றது.

துன்பம் உறவரினும் செய்க துணிவுஆற்றி

இன்பம் பயக்கும் வினை. .....(669)

ஆரம்பத்திலே ஏற்படுகின்ற துன்பங்களால் வருத்தம் அடைய நேர்ந்தாலும் முடிவிலே இன்பம் தருகின்ற செயல்களை மனத் துணிவுடன் ஆற்றி முடிக்க வேண்டும் என்பதே மேற்படி குறட்பாவின் பொருளாகும். இதற்கு ஒப்பான கருத்தினைப் பிரதிபலிப்பதாகப் பின்வரும் குறளும் அமைகின்றது.

இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு

இடும்பை படாஅ தவர். ..... (623)

ஒரு செயலைச் செய்யும் போது ஏற்படக் கூடிய இடையூறுகளுக்காக வருந்தாத மனத் தெளிவு உடையவர்கள் துன்பத்துக்குத் துன்பம் உண்டாக்கி அதனைப் போக்கி விடுவர் என்ற கருத்துடைய அக்குறளானது நட்ட வெறுப்பு மற்றும் விசன வெறுப்புப் போன்ற முதலீட்டுத் தவறுகளை முதலீட்டாளர்கள் தவிர்ப்பதற்கான உபாயத்தையும் குறிப்பிடுகின்றது.

மேலும் முதலீடுகள் தொடர்பிலான ஆபத்துக்கும் வருமானத்துக்கும் இடையிலே நேர்க்கணியத் தொடர்பு காணப்படுவதாக நிதி முகாமைத்துவ கோட்பாடுகள் குறிப்பிடுகின்றன (Alexander, 2018). அதாவது ஆபத்து அதிகமாகவுள்ள முதலீடுகளில் முதலீடு செய்வதன் மூலமாக முதலீடுகளிலிருந்தான வருமானத்தை அதிகரிக்க முடியும். மறுபுறம் ஆபத்துக் குறைந்த முதலீடுகள் குறைந்தளவிலான வருமானத்தை வழங்கும். சில சந்தர்ப்பங்களில் முதலீட்டாளர்கள் அதீத வருமானத்தை உழைக்கும் நோக்குடன் ஆபத்து அதிகமாகவுள்ள முதலீடுகளில் தமது பணத்தை முதலீடு செய்வர். ஆனால் இந்த அதிகளவிலான ஆபத்து நிலைமை காரணமாக சில சந்தர்ப்பங்களில் அவர்கள் தாம் முதலீடு செய்த மூலதனத் தொகையையே இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். இந்த நிலைமையைப் பின்வரும் குறட்பா விளக்குகின்றது.

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்

உயிர்க்குஇறுதி யாகி விடும். .....(476)

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

இதன் கருத்து யாதெனில் மரத்தின் நுனிக் கொம்பு வரையும் ஏறியவர்கள் அதனையும் கடந்து மேலும் ஏறுவதற்கு முயன்றால் அது அவர்களின் உயிருக்கே இறுதியாகி விடும் என்பதாகும். முதலீடுகள் தொடர்பிலும் ஒரு எல்லைக்கு மீறிய அதீத ஆபத்தை எதிர் கொள்ள முற்படும் போது அந்த முதலீடுகள் தொடர்பிலான வருமானத்தை மட்டுமன்றி மூலதனத் தொகையையும் இழக்க நேரிடும். இதனால் தகுந்த ஆபத்து மட்டத்தைப் பேணக் கூடிய வகையில் முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளைத் தெரிவு செய்ய வேண்டும்.

முதலீடுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் நோக்கமும் திருக்குறளும்

அடுத்ததாக முதலீடுகள் தொடர்பான பாதுகாப்பைப் பேணுவதும் முதலீட்டின் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய அம்சமாகும். இங்கு முதலீடுகளின் பாதுகாப்பு என்பது குறித்த முதலீட்டில் ஈடுபடுத்தப்படும் முதலீட்டாளர்களின் மூலதனத்துக்கான பாதுகாப்பைக் கருதும் *(Jones, 1994)*. அதாவது முதலீட்டுக் கால நிறைவில் முதலீட்டாளர்கள் தமது மூலதனத்தைப் பாதுகாப்பாக மீளப் பெறக் கூடிய நிலைமையையே முதலீடுகளின் பாதுகாப்பு எனப்படும். சில வகையான முதலீடுகள் அதிக வருமானத்தைத் தரவல்லனவாயினும் மூலதனத்துக்குரிய பாதுகாப்புத் தொடர்பில் கேள்விக்குரியனவாக உள்ளன.

ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை

ஊக்கார் அறிவுடை யார். .....*(463)*

பெரும் வருமானம் கிடைக்குமென எதிர்பார்த்து கையிலுள்ள முதலையும் இழந்து விடக்கூடிய செயலை அறிவுடையோர்கள் ஒரு போதும் மேற்கொள்ளமாட்டார்கள் என்ற கருத்துடைய இந்தக் குறளானது முதலீடுகளின் பாதுகாப்புத் தொடர்பான சிறந்த விளக்கமாகக் காணப்படுகின்றது. இன்றைய சூழலில் பல முதலீட்டாளர்கள் அதீத வருமானத்தை ஈட்டும் நோக்குடன் பாதுகாப்பற்ற முறைசாராத கடன் வழங்குகைள் போன்ற பாதுகாப்பற்ற முதலீடுகளில் ஈடுபட்டு தமது மூலதனத்தை இழந்து நிற்கின்ற நிலைமையை அதிகளவுக்கு அவதானிக்க முடிகின்றது. இந்நிலையில் மூலதனத்துக்குரிய பாதுகாப்பை ஒரு முதலீட்டாளார் பேண வேண்டியதன் அவசியத்தைப் பின்வரும் குறளில் பொய்யாமொழிப் புலவர் எடுத்துரைக்கின்றார்.

பொருள்ஆட்சி போற்றாதார்க்கு இல்லை அருள்ஆட்சி

ஆங்குஇல்லை ஊன்தின் பவர்க்கு .....*(252)*

பொருளுடையவராக இருக்கும் தகுதி அப்பொருளை வைத்துக் காப்பாற்றாதவர்க்கு இல்லை. இதே போன்று அருளுடையவராக இருக்கும் தகுதி ஊனைத் தின்பவர்க்கு இல்லை என்பது இதன் பொருளாகும். புலால் உண்ணாமையை வலியுறுத்த முற்பட்ட பெருநாவலர் பொருள் அல்லது மூலதனத்தைப் பேணிக் காப்பாற்ற வேண்டியதன் அவசியத்தைச் சுட்டி நிற்கின்றார்.

முதலீட்டுத் தீர்மானமும் திருக்குறளும்

முதலீட்டுத் தீர்மானம் என்பது ஒரு முதலீட்டாளர் தனக்குரிய நிதிசார் இலக்குகளை நிர்ணயித்து, அவற்றை அடைவதற்கான ஒரு தந்திரோபாயத் திட்டத்தை உருவாக்கி அவற்றின் அடிப்படையில் தனது நிதிசார் வளங்களை வேறு முதலீட்டு வாய்ப்புக்களில் முதலீடு செய்யும் செயன்முறையைக் கருதும் *(Hani, 2020)*. முதலீட்டுத் திட்டமிடலுக்கும் அதன் நடைமுறைப்படுத்தலுக்கும் முதலீடுகள் பற்றிய சிறந்த அறிவு, நிதிசார் இலக்குகளை நிர்ணயிக்கும் திறன், திட்டமிடல் திறன் என்பன அவசியமாகும். இதனைப் பின்வரும் குறட்பா மூலம் சிறப்பாக உணர்த்தப்படுகின்றது. குறிப்பாக முதலீடுகளை மேற்கொள்வதற்கு முன்பாக முதலீட்டுத் திட்டமிடல் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் காட்டுகின்றது.

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்

எண்ணுவம் என்பது இழுக்கு. .....*(467)*

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

முதலீட்டுத் தீர்மானமெடுத்தலில் முதலீட்டுக்குத் தேவையான நிதி, முதலீட்டுக்கான காலம், முதலீட்டுத் தந்திரோபாயங்கள், முதலீட்டுக் கருவிகள் முதலீடுகள் மேற்கொள்ளப்படும் நிறுவனம் அல்லது பிரதேசம் ஆகிய ஐந்து காரணிகளையும் தீர்மானிப்பது முக்கிய இடம் பெறுகின்றது *(Shrestha & Bhatta, 2024)*. இந்த ஐந்து காரணிகளையும வள்ளுவனார் பின்வரும் குறளில் சிறப்பாகப் பட்டியலிட்டுள்ளார்.

பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்

இருள்தீர எண்ணிச் செயல். ……(675)

ஒரு செயலை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதனுடன் தொடர்புடைய பொருள் தேவைப்பாடு (நிதி வளங்கள்), கருவி, காலம், வினை அல்லது செயல் முறை, இடம் ஆகிய ஐந்து அம்சங்களையும் தெளிவாக ஆராய்ந்து பார்த்த பின்பே அந்தச் செயலை முன்னெடுக்க வேண்டும் என்பதே மேற்படி குறளின் கருத்தாகும். மேலும் மேற்படி காரணிகளில் முதலீடுகளின் இலாபம், ஆபத்து மற்றும் நிதித் திரட்சி என்பனவற்றை நேரடியாக பாதிக்கும் மிக முக்கியமான காரணியான முதலீட்டுக் காலம் அமைகின்றது. உதாரணமாக முதலீடுகளுக்கான வட்டியானது கால அடிப்படையில் கணிப்பிடப்படுவதனால் ஆரம்பத்தில் முன்னதாகச் செய்யப்படும் முதலீடுகள் தாமதமாகச் செய்யப்படும் முதலீடுகளிலும் பார்க்க அதிக வட்டியை ஈட்டிக் கொள்ளும். பங்குகள் மற்றும் ஆதனங்கள் போன்றவற்றில் முதலீடு செய்யும் போது அவற்றின் சந்தை விலைகள் இழிவாகக் காணப்படும் போது அவற்றைக் கொள்வனவு செய்து அவற்றின் சந்தை விலைகள் உச்சமாக உள்ள போது விற்பனை செய்வதன் மூலம் முதலீட்டாளர்கள் தமக்குரிய இலாபத்தை உச்சப்படுத்த முடிவதுடன் முதலீட்டு ஆபத்துக்களையும் இழிவாக்க முடியும் *(Laopodis, 2020)*. மேற்படி அம்சங்களைப் பின்வரும் குறட்பாக்கள் விளக்குகின்றன.

பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்

தீராமை ஆர்க்குங் கயிறு. ……(482)

காலத்தோடு பொருந்துமாறு ஆராய்ந்து செயற்படுதல் செல்வத்தை நீங்காமல் நிற்குமாறு பிணைக்கும் கயிறாகும் என்பதே இதன் பொருளாகும்.

அருவினை யென்ப உளவோ கருவியான்

காலம் அறிந்து செயின். ……(483)

குறித்தவொரு செயலை நிறைவேற்றுவதற்குப் பொருத்தமான உபாயங்கள் மற்றும் கருவிகளுடன் பொருத்தமான காலத்தையும் அறிந்து செய்தால் அடைய முடியாத அரிய செயல்கள் எவையும் இல்லை என்பதே இக்குறட்பாவின் மையக் கருத்தாகும். இதே போன்று ஏற்ற காலத்தையும் இடத்தையும் அறிந்து ஒரு செயலைச் செய்தால், பூவுலகம் முழுவதும் கைவசப்படும் என்ற கருத்தைப் பின்வரும் குறளிலும் காணலாம்.

ஞாலம் கருதினுங் கைகூடுங் காலம்

கருதி இடத்தாற் செயின். ……(484)

மேலும் முதலீட்டுத் திட்டமிடலை மேற்கொண்டு முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது சிறந்த முதலீட்டு வாய்ப்புக்களை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுடன் தவறான முதலீட்டுத் தெரிவுகளும் தவிர்க்கப்பட வேண்டும். இதனை ஆற்றக்கூடாத விடயங்களைச் செய்வதாலும் ஆற்ற வேண்டியவற்றைச் செய்யாது தவிர்த்து விட்டாலும் கேடு ஏற்படும் என்ற கருத்துடைய பின்வரும் குறள் சுட்டுகின்றது.

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க

செய்யாமை யானுங் கெடும். ……(466)

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

மேலும் முதலீட்டாளர்கள் தமது முதலீட்டுத் திட்டமிடலை மேற்கொண்டு முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது, நடத்தைசார் நிதியியலில் *(Behavioural Finance)* அண்மைக் காலங்களில் அதிகம் பிரபல்யம் பெற்றுள்ள அதீத நம்பிக்கை *(Overconfidence)* என்ற முதலீட்டுத் தவறை ஏற்படுத்துகின்றனர் என்பது நடத்தைசார் நிதியியல் ஆய்வாளர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது *(Hainguerlot et al., 2023; Phan et al., 2020; Huffman et al., 2022).*

அதீத நம்பிக்கை என்பது முதலீட்டாளர்கள் தங்களுடைய அறிவு, திறன் அல்லது சந்தையை மதிப்பீடு செய்யும் திறன் உண்மையில் இருப்பதை விட அதிகமாகக் காணப்படுவதாக நம்புவது ஆகும். இதனால் அவர்கள் சந்தை ஆபத்துக்களை சரியாக மதிப்பிடாது அதிக ஆபத்தான முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்வர்.

எனவே ஒரு முதலீட்டாளர் தனது முதலீட்டுத் தீர்மானங்கள் எப்போதும் சரியானதாக அமையும் என்று நம்பிக்கையினடிப்படையில் பொருத்தமான முதலீட்டு ஆய்வுகளை முன்னெடுக்காது முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்ளும் நிலைமையே அதீத நம்பிக்கை என்பதுடன் இந்நிலைமையானது பாரிய நட்டங்களையும் ஆபத்துக்களையும் முதலீட்டாளர்களுக்கு ஏற்படுத்தலாம் *(Singh et al., 2024).* இக்கோட்பாட்டை தன்னுடைய வலிமை எத்தகையது என அறியாமல் மனவெழுச்சியினால் தூண்டப்பட்டு ஊக்கத்தால் செயல்களை முனைந்து தொடங்கி இடையில் அவற்றை நிறைவேற்ற முடியாது அழிந்தவர் பலர் என்ற பொருள் நிறைந்த பின்வரும் குறட்பா மூலம் வள்ளுவர் சுருக்கமாக ஆனால் ஆணித்தரமாக வெளிப்படுத்தியுள்ளார்.

உடைத்தம் வலி அறியார் ஊக்கத்தின் ஊக்கி

இடைக்கண் முரிந்தார் பலர். .....*(473)*

5. முடிவுரை

உலகப் பொது மறையாக விளங்கும் திருக்குறளானது கால, தேச எல்லைகளைக் கடந்த பொய்யா மொழியாக விளங்குகினறது. தனி மனிதன், நிறுவனங்கள், அரசாங்கங்கள் போன்ற அனைத்தையும் உள்ளடக்கிய உலகப் பொருளாதார இயக்கத்துக்கான உந்து விசையாக நிதி என்பது விளங்குகின்றது. இத்தகைய நிதியியலின் முக்கிய செயற்பாடாகிய முதலீடு என்பதன் நோக்கங்களாகிய வருமானத்தை உச்சப்படுத்துதல், ஆபத்துக்களை இழிவுபடுத்துதல், பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் என்பன தொடர்பில் பல்வேறு குறட்பாக்களில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் இங்கே ஆராயப்பட்டுள்ளன. குறிப்பாக மிக அண்மைக் காலத்தில் நிதி முகாமைத்துவத்தின் பேசு பொருளாகக் காணப்படும் முதலீட்டுத் தவறுகள் மற்றும் முதலீட்டாளர்களது நடத்தை பற்றி விளக்கும் நடத்தைசார் நிதியியல் தொடர்பான கருத்துக்களும் திருக்குறளில் காணப்படுவது அதன் எக்காலத்துக்கும் பொருந்தும் தன்மைக்குச் சான்றாகும். இந்த வகையில் திருக்குறளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள முதலீடு தொடர்பான சிந்தனைகளுக்கும் நவீன நிதி முகாமைத்துவக் கோட்பாடுகளுக்கும் இடையிலான கருத்தியல் தொடர்பை இவ்வாய்வு நிறுவுவதுடன், நவீன நிதிசார் தீர்மானங்களை மேற்கொள்வதில் பாரம்பரியத் தமிழ்ச் சிந்தனைகளின் தொடர்ச்சியான பொருத்தப்பாட்டையும் முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுகின்றது.

உசாத்துணைகள்

Ali, A. (2024). The nexus of social media advertising and its impact on consumer buying behaviour for skincare products. *European Economic Letters, 14*(4), 1213-1222. http://eelet.org.uk.

Alalwan, A. A. (2018). Investigating the impact of social media advertising features oncustomer purchase intention. *International Journal of Information Management*, 42, 65-77.

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

திருக்குறள்: பரிமேலழகர் உரை (19ம் பதி). (2018). பூம்புகார் பதிப்பகம். சென்னை.

Alexander, J. (2018). Financial Planning & Analysis and Business Performance Management. United States: John Wiley & Sons, Ltd.

Bodie, Z., Kane, A. & Marcus, A. (2013). Essentials of Investments. Irwin Mc Graw-Hill.

Brigham, E. F. & Ehrhardt, M. C. (2005). Financial Management: Text and Cases. Cengage Learning India Private Limited, New Delhi 11000.

Fischer, D. E. and Jordan, R. J. (2002). Security Analysis and Portfolio Management. Prentice Hall, New Delhi.

Hainguerlot, M., Gajdos, T., Vergnaud, J. C., & Gardelle, V. (2023). How overconfidence bias influences suboptimality in perceptual decision making. *Journal of Experimental Psychology: Human Perception and Performance*, 49(4), 537.

Hani, L. Y. B. (2020). A study of financial planning and investment of individual. Int. J. Sci. Res, 9(11), 1268-1272.

Huffman, D., Raymond, C., & Shvets, J. (2022). Persistent overconfidence and biased memory: Evidence from managers. *American Economic Review*, 112(10), 3141-3175.

Hutchinson, P., Alison, S., Gregory, H. & Lumby, S. (1994). Financial Management Decisions: Principles and Applications. Nelson Australia Pty Limited, Australia.

Jones, C. P. (1994). Investments: Analysis and Management. John Wiley& Sons, Inc, USA.

Kahneman, D. and Tversky, A. (1979). Prospect theory: An analysis of decision under risk. *Econometrica: Journal of the econometric society*. 47(2),263-291.

Kevin, S. (2006). Portfolio Management. Prentice Hall of India Private Limited, New Delhi, 15.

Laopodis, N. T. (2020). Understanding investments: Theories and strategies. Routledge.

Loppies, L. S., Esomar, M. J. M. J., & Janah, I. N. (2022). Herding behavior, overconfidence, regret aversion bias on investment decisions. *International Journal of Economics, Social Science, Entrepreneurship and Technology (IJESET)*, 1(5), 345-352.

Mayo, H. B. (2008). An Introduction to Investments. Cengage learning India Private Limited, Delhi 110092.

Mc Laney, E. J.(2006). Business Finance: Theory and Practice. Pitman Publishing, London WC2E9AN.

Monks, R.,A.(2001). The New Global Investors. Capstone, Oxford.

Phan, D. T. T., Le, V. H. T., & Nguyen, T. T. H. (2020). Overconfidence bias, comparative evidences between Vietnam and selected ASEAN countries. *The Journal of Asian Finance, Economics and Business*, 7(3), 101-113.

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.

Pompian, M.M. (2006). Behavioral Finance and Wealth Management. Wiley: New Jersey.

Rahawarin, F. R. (2023). The effect of loss aversion bias and regret aversion bias on financial decisions with financial literacy as an intervening variable. Accounting and Finance Studies, 3(1), 24-37.

Reilly, F. K. and Brown, K. C. (2012). Analysis of Investments & Management of Portfolios. Cengage learning India Private Limited, Delhi 110092.

Samarakoon, L. (2010). Equity Securities: Theory and Practice. Securities and Exchange Commission of Sri Lanka, Sri Lanka.

Shiller, R. J. (1998).Survey evidence on diffusion of interest and information among investors. *Journal of Economic Behavior and Organization*, 12(1),47–66.

Shrestha, S. K., & Bhatta, J. (2024). Understanding the Key Drivers of Systematic Investment Plan Investment Behavior. *NPRC Journal of Multidisciplinary Research*, 1(6), 168-174.

Singh, D., Malik, G., & Jha, A. (2024). Overconfidence bias among retail investors: A systematic review and future research directions. Investment Management & Financial Innovations, 21(1), 302.

Vaish, M. C. (1978). Modern Banking. Oxford and IBH Publishing Co., New Delhi.

Velnampy, T. (2009). Thirukkural and Management: A Comparative Study, Chemamadu Publications- Colombo.

© Faculty of Commerce and Management, Eastern University Sri Lanka. All rights reserved.